# களத்தில் இளைஞர் அணி

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.



பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி, திருநெல்வேலி மத்திய மாவட்டம்.



மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் தெற்கு மாவட்டம்.



பழனி சட்டமன்றத் தொகுதி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி, நாமக்கல் கிழக்கு மாவட்டம்.



திருவாரூர் சட்டமன்றத் தொகுதி, திருவாரூர் மாவட்டம்.



இலால்குடி சட்டமன்றத் தொகுதி, திருச்சி மத்திய மாவட்டம்.



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி, இராமநாதபுரம் மாவட்டம்.



அவிநாசி சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் வடக்கு மாவட்டம்.



விராலிமலை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்.

## செங்கல்பட்டு – ஆலந்தூரில் நாளை மாலை நடைபெறும் பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில்

# கழக வேட்பாளர்களை ஆதரித்து உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

### கழகத் தோழர்கள் அலைகடலெனத் திரண்டு வாரீர்! தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

**காஞ்சிபுரம், ஏப். 12–**

**செங்கல்பட்டு – ஆலந்தூரில் நாளை மாலை நடைபெறும் பிரம்மாண்டமான தேர்தல் பிரச்சாரம் பொதுக் கூட்டத்தில் கழக வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்த வேனில் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். இந்த இரு கூட்டங்களுக்கும் கழகத் தோழர்கள் அலைகடலென திரண்டு வரும்படி மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செங்கல்பட்டு தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் எம்.கே.டி.கார்த்திக் அவர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் நாளை (13-ஆம் தேதி) மாலை 4.00 மணியளவில் செங்கல்பட்டு, இராட்டின கிணறு திடலில் நடைபெற உள்ளது.

இப்பிரம்மாண்ட தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு திறந்த வேனில் செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் எம்.கே.டி.கார்த்திக் அவர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரையாற்றுகிறார்.

ஆலந்தூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் தா.மோ.அன்பரசன் அவர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நாளை (13-ஆம் தேதி) மாலை 6.00 மணியளவில் நங்கநல்லூர், ஸ்டேட் பேங்க் காலனியில் நடைபெற உள்ளது.

திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைப்போம் என்ற லட்சிய உணர்வுடன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் இந்த இரு கூட்டங்களிலும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும் படி அன்புடன் அழைக்கிறேன்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள் - கழக தீரர்கள் அனைவரும் கொள்கை தீரர்களாக தலைவரின் போர்ப்படை சிப்பாய்களாக பெரும் படையாக திரண்டு வந்து இந்த இரு பொதுக்கூட்டங்களையும் வெற்றியடைய செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கே.எம்.ராஜீவை அவர்களை ஆதரித்து கோத்தகிரி ஜான்சன் சதுக்கத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரையாற்றினார். உடன் கொறடா கழக மாநில தேர்தல் பணிக்குழுச் செயலாளர் க.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாநகரம், மு.க.ஸ்டாலின் பூங்காவிற்கு வருகை தந்த பொதுமக்களிடம், பொதுப்பணித்துறை அமைச்சரும், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான எ.வ.வேலு அவர்கள் வாக்குசேகரித்தார்.



சென்னை கிழக்கு மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி 54அ, 54ஆ வட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி,எஸ்.ராஜசேகர், இரா. நரேந்திரன்,இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, ரஞ்சித் விஜயாலயன், பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: வே.பா.பிரபாகரன். எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், லண்டன் க. முருகன். மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.